**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆடி 26 ம் நாள்

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் நாள் திங்கள்கிழமை

**இடைக்கால மனு எண்.10/2025**

**in**

**அசல் வழக்கு எண். 383/2017**

1. S. சரஸ்வதி
2. V. கலைசெல்வி
3. B. பழனிவேல்
4. B. கோபாலகிருஷ்ணன் ... **மனுதாரர்கள்/26 முதல் 29 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டியவர்கள்**

//எதிர்//

1. செந்தில்குமார் ... **எதிர்மனுதாரர்/வாதி**
2. வெள்ளையம்மாள் (Died)
3. P. பத்மாவதி
4. S. சத்யபிரியா
5. P. செந்தில்குமார்
6. R. பழனிசாமி
7. R. வசந்தாமணி
8. தனலட்சுமி (Died)
9. T. பரமேஸ்வரி
10. G. பழனிசாமி
11. V. மாணிக்கம்

12. M. தாரணி

13. M. கார்த்திகேயன்

14. சார்பதிவாளர், சூலூர்

15. R. தேவராஜ்

16.R. செந்தில்குமார்

17. K. ரங்கசாமி

18. K. சாமிநாதன்

19. K. வசந்தாமணி

20.K. கமலம்

21. R.P. நவீன் பாலாஜி

22. R.P. ஹர்சினி

23. G. ரகுபதி

24. B. பத்மாவதி

25. B. சேதுபதி

26. B. கௌசல்யா ... **எதிரிமனுதாரர்கள்/1 முதல் 25 பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ 26 முதல் 29 தரப்பினராக சேர்க்கக்கூடிய பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.R.ஸ்ரீசித்ராதேவி, அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6, 14 முதல் 18, 24 முதல் 26 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5, 13 முதல் 17, 23 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.K.பிரபுராம், அவர்கள் ஆஜராகியும், 7, 9, 11 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/ 6, 8, 10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ரவீந்திரன், அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள்/ 1 மற்றும் 7 பிரதிவாதிகள் இறந்துவிட்ட படியும், 10 ம் எதிர்மனுதாரர்/9 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.S.கண்ணன், அவர்கள் ஆஜராகியும், 21 முதல் 23 எதிர்மனுதாரர்கள்/ 20 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.கோபாலகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், 19 மற்றும் 20 எதிர்மனுதாரர்கள்/ 18 மற்றும் 19 பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மேற்படி வழக்கில் 1 முதல் 4 மனுதாரர்களை 26 முதல் 29 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). வாதி, 1 முதல் 25 பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆரம்பத்தில் வழக்கு சொத்து குழந்தை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி குழந்தை கவுண்டருக்கு ராமண கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டர் என இரண்டு மகன்கள். 20.08.1934 அன்று ராமண கவுண்டரும், நஞ்சப்ப கவுண்டரும் பாகப்பிரிவினை ஆவணம் மூலமாக சொத்துக்களை பிரித்துக் கொண்டனர். அதில் 'ஏ' அட்டவணை சொத்துக்களாக வழக்கு சொத்து ராமண கவுண்டருக்கும், நஞ்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது. 20.08.1934 அன்று பாகப்பிரிவினை ஏற்பட்ட போதிலும் ராமண கவுண்டரும், நஞ்சப்ப கவுண்டரும் அவரது சொத்துக்களை அவர்களுக்குள் மாற்றி அடைந்து அனுபவம் செய்து வந்தனர்.

1.2). ராமண கவுண்டருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் அவர்கள் கருப்புசாமி, பழனிசாமி மற்றும் தேவாத்தாள் ஆவார்கள். 1ம் எதிர்மனுதாரர்/வாதி தேவாத்தாளின் மகன் ஆவார். மேற்படி கருப்புசாமி, பழனிசாமியும் வாரிசுகளாக

வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினராக உள்ளனர். நஞ்சப்ப கவுண்டருக்கு மூன்று மகன்கள் இரண்டு மகள்கள் அவர்கள் குழந்தை கவுண்டர், அருணாச்சலம், உண்ணாத்தாள், ராமசாமி, செல்லம்மாள் ஆவார்கள். வாதி ஏற்கனவே குழந்தை கவுண்டர் மற்றும் ராமசாமி அவர்களின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளார். வாதி அருணாச்சலத்தின் வாரிசுகளான ராஜாமணி, சுமதி மற்றும் உண்ணாத்தாளின் வாரிசுகளான மனுதாரர்களையும், செல்லம்மாளின் வாரிசுகளான புவனேஸ்வரி, கோகிலா மற்றும் வேணுகோபால் ஆகியோர்களை வேண்டும் என்று இந்த வழக்கில் சேர்க்கவில்லை. மேற்படி நபர்கள் இந்த வழக்கில் இறுதிநிலை தீர்ப்பை எட்ட முக்கியமான தரப்பினர்கள் அவசிய தரப்பினார்கள் ஆவார்கள்.

1.3). ஏற்கனவே ராமண கவுண்டருக்கும், நஞ்சப்ப கவுண்டருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு சொத்து சம்பந்தமான வாய்மொழி பரிமாற்றம் ஏற்பட்டு, நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகள் தாவா சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வருகின்றனர். வாய்மொழி பரிமாற்றத்தின்படி நஞ்சப்ப கவுண்டருக்கு 20.08.1934 பாகப்பிரிவினை ஆவணம் மூலமா ஒதுக்கப்பட்ட வழக்கு சொத்தின் ஒரு பகுதியை ராமண கவுண்டரின் மகன்களான கருப்புசாமி மற்றும் பழனிசாமி நஞ்சப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தில் ஒரு பகுதியை விற்று விட்டனர்.

1.4). 20.08.1934 அன்று பாகப்பிரிவினை ஆவணம் மூலமாக வழக்கு சொத்து ராமண கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றும் அதில் மேற்படி சொத்து ராமண கவுண்டருக்கும், நஞ்சப்ப கவுண்டருக்கும் இடையே வாய்மொழி மாற்றம் ஏற்பட்டது குறித்து வாதி மறைத்துள்ளார். நஞ்சப்ப கவுண்டரின் 5 வாரிசுகளில் இரண்டு வாரிசுகள் மட்டுமே வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர். நஞ்சப்ப கவுண்டரின் மகளான உண்ணாத்தாளின் வாரிசுகள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் அவர்கள் மேற்படி வழக்கில் இறுதிநிலை தீர்ப்பை எட்ட அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். மனுதாரர்களை 26 முதல் 29 பிரதிவாதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருன்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். கடந்த 1934 ல் மனுதாரரின் முன்னோரான ஒரு குழந்தே கவுண்டரின் வாரிசுகளான ராமண கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டரிடையே பாகப்பிரிவினை பத்திரத்தின் படி 'ஏ' ஷெட்யூல் பாகம் 1ம் பதிர்மனுதாரரின் தாய் வழிப்பாட்டனார் ராமண கவுண்டருக்கும், 'பி' ஷெட்யூல் பாகம் ராமண கவுண்டரின் இளைய சகோதரர் நஞ்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது.

2.2). வழக்கு சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவண எண்.1504/1934 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையிலேயே 1ம் எதிர்மனுதாரர் தனது தாய் வழிப் பாட்டனாரின் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தில் பாகப்பிரிவினை கோரி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் இந்த மனுதாரர்கள் கூறியுள்ளவாறு 2ம் எதிர்மனுதாரர் வெள்ளையம்மாள் (13.12.2018 இறப்பு) முதல் எதிர்மனுதாரரின் தாய் மாமா கருப்புசாமி (12.06.2006 இறப்பு)யின் மனைவி (ராமண கவுண்டரின் மூத்த மகனின் மனைவி) ஆவார். 1ம் எதிர்மனுதாரரின் தாய் மாமா கருப்புசாமி காலம் சென்றுவிட்டதால் அவரது மனைவியை இந்த வழக்கில் வழக்கு தொடர்ந்த சமயத்தில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டார். 3ம் எதிர்மனுதாரர் கருப்புசாமியின் மகள் 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் மகள் வழிப் பேரன் மற்றும் பேத்திகள் ஆவார்கள். மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 6ம் எதிர்மனுதாரர் ராமண கவுண்டரின் 2-வது மகனாவார்.

2.3). மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 7, 8, 9 எதிர்மனுதாரர்கள் ராமண கவுண்டரின்மகள் தேவாத்தாளின் பெண் வாரிசுகளாவார்கள். 8ம்

எதிர்மனுதாரர் தனலட்சுமி காலம் சென்றுவிட்டதால் அவரது வாரிசுகளான 11, 12, 13 எதிர்மனுதாரர் கணவர் மற்றும் மகன், மகளை இந்த வழக்கின் தரப்பினர்களாக 1ம் எதிர்மனுமாரர் சேர்த்துள்ளார். மேற்படி மனுவின் 10 எதிர்மனுதாரர் G.பழனிச்சாமி மனு சொத்தின் குறிப்பிட்ட பகுதியை 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் ராமண கவுண்டரின் ஆண் வாரிசுகளிடம் பொது அதிகாரம் பெற்ற நபராவார். 15 மற்றும் 16 எதிர்மனுதாரர்கள் நஞ்சப்ப கவுண்டரின் ஆண் வாரிசான ராமசாமியின் வாரிசுகள். 17 மற்றும் 18 எதிர்மனுதாரர்கள் ராமண கவுண்டரின் 'ஏ' ஷெட்யூல் சொத்தான S.F.No.617/1-ல் தவறுதலாக கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளனர். 19 மற்றும் 20 எதிர்மனுதாரர்கள் 17, 18 எதிர்மனுதாரர்களின் சகோதரிகள். 21, 22 எதிர்மனுதாரர்கள் ஒரு காலம் சென்ற ராதாமணியின் வாரிசுகள். 10ம் எதிர்மனுதாரர் காலம் சென்ற ராதாமணியின் கணவர். 23ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் S.F.No.616/1. 616/3 மற்றும் உட்பிரிவுகளில் சரி பாதியை கிரையம் பெற்றவர்.

2.4). 24, 25, 26 எதிர்மனுதாரர்கள் நஞ்சப்ப கவுண்டரின் 'பி' ஷெட்யூல் சொத்தில் ஒரு காலம் சென்ற பூபதி என்பவர் S.F.No.617-ல் தென்புறம் பொதுவில் சரிபாதியை ராமண கவுண்டரின் இரண்டாவது மகன் பழனிச்சாமி கிரையம் கொடுத்துள்ளார். காலம் சென்ற நஞ்சப்ப கவுண்டருக்கு 1504/1934 பாகப்பிரிவினைப் பாத்தியப்பட்ட சொத்தை 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் 2 வது தாய் மாமன் கிரையம் செய்து கொடுத்துள்ளது செல்லாது. 1ம் எதிர்மனுதாரர் /வாதியின் தாய் வழிப் பாட்டனாரான ராமணகவுண்டரின் இளைய சகோதரர் நஞ்சப்ப கவுண்டர், குழந்தே கவுண்டர், அருணாசலம், ராமசாமி, உண்ணாத்தாள், செல்லம்மாள் என ஐந்து வாரிசுகள் இருந்ததை இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்.

2.5). தாய் வழிப்பாட்டனார் நஞ்சப்பகவுண்டரின் 2 வது ஆண் வாரிசான அருணாசலத்தின் வாரிசுகளான ராஜாமணி-1, சுமதி-2 ஆகியோரிடத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பரிகாரமும் கோரப்படாத காரணத்தினால் மேற்படி வழக்கின் தரப்பினர்களாக கட்சி சேர்க்கவில்லை. நஞ்சப்பகவுண்டரின் 5 வது

வாரிசான செல்லம்மாளின் வாரிசுகளான புவனேஸ்வரி-1, கோகிலா-2, வேணுகோபால்-3, காலம் சென்ற செல்லம்மாளின் கணவர் கந்தசாமி - 4 ஆகியோருக்கு எதிராக எவ்விதமான பரிகாரமும் கோரப்படாத காரணத்தினால் மேற்படி வழக்கின் தரப்பினர்களாக கட்சி சேர்க்கவில்லை.

2.6). காலம் சென்ற நஞ்சப்ப கவுண்டரின் வாரிசான உண்ணாத்தாளின் வாரிசான மனுதாரர்களிடத்தில் இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பரிகாரமும் கோரப்பட வேண்டியதில்லை என்ற காரணத்தினால் இந்த வழக்கில் தரப்பினர்களாக கட்சி சேர்க்க அவசியமோ, தேவையோ ஏற்படவில்லை. இந்த மனுவை மனுதாரர்கள் மேற்படி வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கிலேயே தாக்கல் செய்துள்ளார்கள். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>3). 7, 9, 11 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவின் சுருக்கம் :-</u>**

3.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருன்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். கடந்த 1934 ல் மனுதாரரின் முன்னோரான ஒரு குழந்தே கவுண்டரின் வாரிசுகளான ராமண கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டரிடையே பாகப்பிரிவினை பத்திரத்தின் படி 'ஏ' ஷெட்யூல் பாகம் 1ம் பதிர்மனுதாரரின் தாய் வழிப்பாட்டனார் ராமண கவுண்டருக்கும், 'பி' ஷெட்யூல் பாகம் ராமண கவுண்டரின் இளைய சகோதரர் நஞ்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது.

3.2). வழக்கு சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவண எண்.1502/1934 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையிலேயே 1ம் எதிர்மனுதாரர் தனது தாய் வழிப் பாட்டனாரின் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தில் பாகப்பிரிவினை கோரி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் இந்த மனுதாரர்கள்

கூறியுள்ளவாறு 2ம் எதிர்மனுதாரர் வெள்ளையம்மாள் (13.12.2018 இறப்பு) முதல் எதிர்மனுதாரரின் தாய் மாமா கருப்புசாமி (12.06.2006 இறப்பு)யின் மனைவி (ராமண கவுண்டரின் மூத்த மகனின் மனைவி) ஆவார். 1ம் எதிர்மனுதாரரின் தாய் மாமா கருப்புசாமி காலம் சென்றுவிட்டதால் அவரது மனைவியை இந்த வழக்கில் வழக்கு தொடர்ந்த சமயத்தில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டார். 3ம் எதிர்மனுதாரர் கருப்புசாமியின் மகள் 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் மகள் வழிப் பேரன் மற்றும் பேத்திகள் ஆவார்கள். மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 6ம் எதிர்மனுதாரர் ராமண கவுண்டரின் 2-வது மகனாவார்.

3.3). மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 7, 8, 9 எதிர்மனுதாரர்கள் ராமண கவுண்டரின்மகள் தேவாத்தாளின் பெண் வாரிசுகளாவார்கள். 8ம் எதிர்மனுதாரர் தனலட்சுமி காலம் சென்றுவிட்டதால் அவரது வாரிசுகளான 11, 12, 13 எதிர்மனுதாரர் கணவர் மற்றும் மகன், மகளை இந்த வழக்கின் தரப்பினர்களாக 1ம் எதிர்மனுமாரர் சேர்த்துள்ளார். மேற்படி மனுவின் 10 எதிர்மனுதாரர் G.பழனிச்சாமி மனு சொத்தின் குறிப்பிட்ட பகுதியை 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் ராமண கவுண்டரின் ஆண் வாரிசுகளிடம் பொது அதிகாரம் பெற்ற நபராவார். 15 மற்றும் 16 எதிர்மனுதாரர்கள் நஞ்சப்ப கவுண்டரின் ஆண் வாரிசான ராமசாமியின் வாரிசுகள். 17 மற்றும் 18 எதிர்மனுதாரர்கள் ராமண கவுண்டரின் 'ஏ' ஷெட்யூல் சொத்தான S.F.No.617/1-ல் தவறுதலாக கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளனர். 19 மற்றும் 20 எதிர்மனுதாரர்கள் 17, 18 எதிர்மனுதாரர்களின் சகோதரிகள். 21, 22 எதிர்மனுதாரர்கள் ஒரு காலம் சென்ற ராதாமணியின் வாரிசுகள். 10ம் எதிர்மனுதாரர் காலம் சென்ற ராதாமணியின் கணவர். 23ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் S.F.No.616/1. 616/3 மற்றும் உட்பிரிவுகளில் சரி பாதியை கிரையம் பெற்றவர்.

3.4). 24, 25, 26 எதிர்மனுதாரர்கள் நஞ்சப்ப கவுண்டரின் 'பி' ஷெட்யூல் சொத்தில் ஒரு காலம் சென்ற பூபதி என்பவர் S.F.No.617-ல் தென்புறம் பொதுவில் சரிபாதியை ராமண கவுண்டரின் இரண்டாவது மகன் பழனிச்சாமி கிரையம்

கொடுத்துள்ளார். காலம் சென்ற நஞ்சப்ப கவுண்டருக்கு 1504/1934 பாகப்பிரிவினைப் பாத்தியப்பட்ட சொத்தை 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் 2வது தாய் மாமன் கிரையம் செய்து கொடுத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் /வாதியின் தாய் வழிப் பாட்டனாரான ராமணகவுண்டரின் இளைய சகோதரர் நஞ்சப்ப கவுண்டர், குழந்தே கவுண்டர், அருணாசலம், ராமசாமி, உண்ணாத்தாள், செல்லம்மாள் என ஐந்து வாரிசுகள் இருந்ததை இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்.

3.5). தாய் வழிப்பாட்டனார் நஞ்சப்பகவுண்டரின் 2வது ஆண் வாரிசான அருணாசலத்தின் வாரிசுகளான ராஜாமணி-1, சுமதி-2 ஆகியோரிடத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பரிகாரமும் கோரப்படாத காரணத்தினால் மேற்படி வழக்கின் தரப்பினர்களாக கட்சி சேர்க்கவில்லை. நஞ்சப்பகவுண்டரின் 5வது வாரிசான செல்லம்மாளின் வாரிசுகளான புவனேஸ்வரி-1, கோகிலா-2, வேணுகோபால்-3, காலம் சென்ற செல்லம்மாளின் கணவர் கந்தசாமி - 4 ஆகியோருக்கு எதிராக எவ்விதமான பரிகாரமும் கோரப்படாத காரணத்தினால் மேற்படி வழக்கின் தரப்பினர்களாக கட்சி சேர்க்கவில்லை.

3.6). காலம் சென்ற நஞ்சப்ப கவுண்டரின் வாரிசான உண்ணாத்தாளின் வாரிசான மனுதாரர்களிடத்தில் இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பரிகாரமும் கோரப்பட வேண்டியதில்லை என்ற காரணத்தினால் இந்த வழக்கில் தரப்பினர்களாக கட்சி சேர்க்க அவசியமோ, தேவையோ ஏற்படவில்லை. இந்த மனுவை மனுதாரர்கள் மேற்படி வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கிலேயே தாக்கல் செய்துள்ளார்கள். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4).** 2 முதல் 6, 14 முதல் 18, 24 முதல் 26 மற்றும் 21 முதல் 23 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு அனுமதிக்க ஆட்சேபனை எதுவும் இல்லை என தெரிவித்துள்ளனர்.

5). இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

6). இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

7). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

7.1). அசல் வழக்கு 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாவா சொத்தை 12 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பங்கை வாதிக்கு ஒதுக்கித்தர வேண்டி முதல் நிலை தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் குழந்தை கவுண்டரின் மகன்கள் ராமண கவுண்டருக்கும் நஞ்சப்ப கவுண்டருக்கும் இடையே 20.08.1934 அன்று வழக்கு சொத்தை பொறுத்து வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு ராமண கவுண்டரும், நஞ்சப்ப கவுண்டரும் அவரது சொத்துக்களை அவர்களுக்குள் மாற்றி அடைந்து அனுபவம் செய்து வந்தனர். ராமண கவுண்டருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் ஆவார்கள். 1ம் எதிர்மனுதாரர்/வாதி மகள் தேவாத்தாளின் மகன் ஆவார். மேற்படி மகன்கள் கருப்புசாமி, பழனிசாமியும் வாரிசுகளாக வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினராக உள்ளனர்.

7.2). நஞ்சப்ப கவுண்டருக்கு மூன்று மகன்கள் இரண்டு மகள்கள் அவர்கள் குழந்தை கவுண்டர், அருணாச்சலம், உண்ணாத்தாள், ராமசாமி, செல்லம்மாள் ஆவார்கள். வாதி ஏற்கனவே குழந்தை கவுண்டர் மற்றும் ராமசாமி அவர்களின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளார். வாதி அருணாச்சலம் மற்றும் அருணாச்சலத்தின் வாரிசுகளான ராஜாமணி, சுமதி மற்றும் உண்ணாத்தாளின் வாரிசுகளான மனுதாரர்களான மனுதாரர்களையும் வாரிசுகளான புவனேஸ்வரி, கோகிலா மற்றும் வேணுகோபால் ஆகியோர்களை இந்த வழக்கில்

சேர்க்கவில்லை என சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை எனவே அவர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

7.3). இரு தரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது முதல்நிலை தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என சொல்லியுள்ள நிலையில் மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தில் பாகம் கிடைக்கத்தக்கதா என்று அசல் வழக்கு விசாரணையின் போது தெரியவரும். எனவே முதல்நிலை தீர்ப்பாணை வழக்குகளில் வாரிசுகளை கட்சி சேர்ப்பது அவசியமாகும். மேற்படி நஞ்சப்ப கவுண்டரின் மகளான உண்ணாத்தாளின் வாரிசுகளான மனுதாரர்களை 26 முதல் 29 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே நீதியின் நலம் கருதி மேற்படி மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.10/2025 in
OS.383/2017 in
Dated:.11.08.2025
DMC, Sulur.